**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**

**நாள். 21.01.2026.**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**
**அசல் வழக்கு எண். 12/2025**

2026-ம் ஆண்டு ஜனவரி மாதம் 21ம் நாள் புதன்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருநாவுக்கரசு | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | சுந்தரம் | வயது | : | 56 |
| ஊர் | : | சோதியம்பாக்கம் | தொழில் | : | உதவி மாவட்ட அலுவலர், தீயணைப்புத்துறை |

**வா.சா. 1 : (திருநாவுக்கரசு) குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 15வது பத்தியில் வழக்கு சி செட்யுல் சொத்து 5ல் 4 பாகம் எனக்கும் பிரதிவாதிக்கும் உரிமையுள்ளது என்றும் மீதமுள்ள 5ல் 1 பாகம் அதே கிராமத்தை சேர்ந்த சிவசங்கரன் பூபாலன் ஆகியோருக்கு உரிமையானது என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி சிவசங்கரன், பூபாலன் அவர்களின் வழக்கு சொத்தில் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் அவர் பயிர் செய்து வருகிறார். மேற்படி பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்ற விவரத்தை நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதியானவர் எக்காலத்திலும் அன்னபூரணி என்பவர் நிலத்திற்கு தண்ணீர் எடுத்துச்செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவர் இந்நாள் வரை அன்னபூரணி நிலத்திற்கு தண்ணீர் எடுத்துச் செல்கிறார். வழக்கினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை இத்துடன் முடிவடைகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

K NALEENI
Digitally signed by K NALEENI
Date: 2026.01.21 15:37:56 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு